19-05-2011 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! ஆத்ம அபிமானி ஆகுக! நடந்தாலும் சுற்றினாலும், அமர்ந்தாலும் எழுந்தாலும் இந்த பயிற்சியையே செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் மிகவும் முன்னேற்றம் உண்டாகிக் கொண்டே இருக்கும்.

கேள்வி: தந்தையின் துல்லியமான நினைவு எந்த குழந்தைகளின் புத்தியில் இருக்கும்?

பதில்: தந்தையை துல்லியமாகத் தெரிந்து கொண்டிருக்கும் குழந்தைகளின் புத்தியில் துல்லியமான நினைவு இருக்கும். பல குழந்தைகள் புள்ளியை எப்படி நினைவு செய்வது என்று கேட்கிறார்கள். பக்தியில் அகண்ட ஜோதி என்று புரிந்து கொண்டு நினைவு செய்து வந்தார்கள், இப்போது புள்ளி என்று கூறும்போது குழப்பம் அடைகின்றனர். ஆகையால், தந்தை அகண்ட ஜோதி அல்ல அவரோ மிக மிக சூட்சுமமான புள்ளியாக உள்ளார் என்பதை முதன் முதலில் நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். அப்போது நினைவு துல்லியமாக இருக்கும்.

ஓம் சாந்தி! அனைத்து குழந்தைகளும் நினைவில் அமர்ந்துள்ளனர். மன்மனாபவ. உண்மையில் இந்த சமஸ்கிருத வார்த்தை கிடையாது. தந்தை சகஜ இராஜயோகம் கற்றுக் கொடுத்த போது இந்த சமஸ்கிருத வார்த்தையைச் சொல்லவில்லை. இவருக்கோ (பிரம்மா பாபா) சமஸ்கிருதமே தெரியாது. தந்தையோ ஹிந்தியில் தான் புரிய வைக்கிறார். இந்த ரதத்திற்கு ஹிந்தி சிந்தி மற்றும் ஆங்கிலம் தெரிந்திருக்கலாம். ஆனால் தந்தை ஹிந்தியில் புரிய வைக்கிறார். சார்ந்திருக்கக்கூடிய தர்மத்தைப் பொறுத்து அவர்களுடைய மொழி இருக்கும். இங்கே ஹிந்தி மொழி தான் உள்ளது. இந்த மொழி புரிந்து கொள்வதற்கு எளிதானது. இந்த பாடசாலையும் கூட அதிசயமானதாகும். இதில் காகிதம், பென்சில், பேனா போன்றவையும் அவசியம் இல்லை. இங்கே ஒரு வார்த்தையை நினைவு செய்ய வேண்டும். அதாவது தந்தையை நினைவு செய்ய வேண்டும். இறைவனையோ ஈஸ்வரனையோ அல்லது பரமபிதா பரமாத்மாவையோ யாரும் நினைப்பதில்லை என்பது கிடையாது. அனைவரும் நினைவு செய்கின்றனர். ஆனால் அவரை தெரிந்து கொள்ளவில்லை. தந்தை தான் வந்து தன்னுடைய அறிமுகத்தைக் கொடுக்கிறார். சாஸ்திரங்களில் கல்பத்தின் ஆயுளை இவ்வளவு நீளமாக எழுதி வைத்து விட்டனர். அதை தந்தை வந்து புரிய வைக்கிறார். மிகப்பெரிய விசயமும் அல்ல. கல் புத்தியுடையவர்கள், வயதான மாதர்கள் என்ன புரிந்து கொள்வார்கள்? இதுவோ மிகவும் எளிதானதாகும். சிறு குழந்தைகள் கூட புரிந்து கொள்ள முடியும். தந்தை எனும் வார்த்தை ஏதும் புதிதல்ல. சிவனுடைய கோயிலுக்குச் சென்றால் இவர் சிவபாபா ஆவார், இவர் நிராகாரமாக உள்ளார் என்பது புத்தியில் உள்ளது. அனைத்து மனிதர்களும் தந்தை என்று கூறுகின்றனர். நம் அனைத்து ஆத்மாக்களின் தந்தை ஒருவர் தான் ஆவார். அனைவரும் ஜீவாத்மாக்கள். அவர்கள் சரீரத்தில் வாசம் செய்கின்றனர். தந்தையை நினைவு செய்கின்றனர். அனைத்து தர்மத்தினரும் பரமபிதா பரமாத்மாவைக் கண்டிப்பாக நினைவு செய்கின்றனர். இவர் பரந்தாமத்தில் வசிக்கக்கூடிய தந்தை. நாம் கூட அங்கே வசிக்கக்கூடியவர்கள் தான். ஆக இப்போது தந்தையை நினைவு செய்ய வேண்டும். தூய்மை அடைய வேண்டும் என்று விரும்பவும் செய்கின்றனர். ஓ பதீத பாவனமாக்குபவரே! வாருங்கள் என்று அழைக்கவும் செய்கின்றனர். புதிய உலகம் தூய்மையாக இருந்தது. இப்போது பழையதாக ஆகி உள்ளது. இதனை யாரும் புதிய உலகம் என்று கூற மாட்டார்கள். புதிய பாரதத்தில் தேவி தேவதைகள் ஆட்சி செய்து கொண்டிருந்தனர் என்பதை பாரதவாசிகள் அறிவார்கள். புதிய பாரதமாக இருந்தது, அதற்கு முன்னால் என்ன இருந்தது? சங்கமம். இதைவிட எளிதாக்கி சொல்ல வேண்டும். புதிய பாரதத்திற்கு முன்பு பழைய பாரதமாக இருந்தது. சங்கமயுகத்தை இவ்வளவு எளிதாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. புதிய உலகம், பழைய உலகம் இரண்டுக்கும் இடைப்பட்டதை **சங்கமம்** என்று அழைக்கிறோம். ஏ! பதீத பாவனா வாருங்கள்; வந்து எங்களைத் தூய்மையாக்குங்கள் என்று பாபாவை அழைக்கிறார்கள். நாம் தூய்மை இழந்து விட்டோம். புதிய உலகத்தில் யாரும் அழைக்க மாட்டார்கள். இந்த பாரதம் தூய்மையாக இருந்தது என்று இப்போது உங்களுடைய புத்திக்கு தெரிந்திருக்கிறது. ஏ பதீத பாவனரே வாருங்கள் என்று பல காலமாக அழைத்துக் கொண்டே வந்தனர். தூய்மையற்ற உலகம் எப்போது முடிவடையும் என்று அவர்களுக்குத் தெரியாது. இன்னும் 40 ஆயிரம் வருடங்கள் தூய்மையற்று இருக்கும் என்று சாஸ்திரங்களில் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்கின்றனர். முற்றிலும் காரிருளில் இருக்கிறார்கள். இப்போது நீங்கள் வெளிச்சத்தில் இருக்கிறீர்கள். பாபா இப்போது உங்களை வெளிச்சத்திற்கு அழைத்து வந்துள்ளார். இந்த 5000 வருடங்களில் சிருஷ்டி சக்கரம் முடிவடைகிறது. இது நேற்றைய விஷயமாகும். நீங்கள் ராஜ்ஜியம்

செய்திருந்தீர்கள், இந்த லஷ்மி நாராயணின் ராஜ்ஜியம் இருந்தது, சொர்க்கமாக இருந்தது. தூய்மையான உலகத்தில் எந்த தொந்தரவு போன்றவையும் ஏற்பட முடியாது. இராவண ராஜ்ஜியத்தில் தான் தொந்தரவு ஏற்படுகிறது. நீங்கள் முன்னால் அமர்ந்து காதுகளால் கேட்கிறீர்கள். கேட்பது யார்? ஆத்மா கேட்கிறது என்று பாபா புரிய வைக்கிறார். பாபா மீண்டும் வந்து சந்திக்கிறார் என்று ஆத்மாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. பாபாவிடமிருந்து ஆஸ்தி அடைந்திருந்தோம். இப்போது என்னை நினைவு செய்யுங்கள் என்று பாபா சொல்கிறார். இதில் எழுதுவது - படிப்பதற்கான எந்த விஷயங்களும் இல்லை. யாரேனும் வந்தால், நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று கேட்கப்படுகிறது. இங்கே உள்ள மகாத்மாவை சந்திக்க வந்தேன் என்று சொல்வார்கள். ஏன்? உங்களுக்கு என்ன வேண்டும்? ஏதும் பிச்சை வேண்டுமா? என்று கேளுங்கள். சன்னியாசியாக இருந்தால் ரொட்டித்துண்டு வேண்டும். சன்னியாசிகள் யாரிடமாவது சென்றால் அல்லது வழியில் சந்தித்தால் இவர்கள் ஆன்மீகவாதிகள், தூய்மையானவர்கள். இவர்களுக்கு உணவு கொடுத்தால் நல்லது என்று புரிந்து நினைக்கிறார்கள். ஆனால் இப்போது தூய்மை கூட இல்லை. முற்றிலும் தமோபிரதானமான உலகம். இதில் பெரிய குப்பையாக இருக்கிறது. மனிதர்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள். இங்கே துன்பப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. எழுதவற்கான விஷயம் கூட இங்கே ஏதும் இல்லை என்று பாபா சொல்கிறார். கருத்துக்கள் போன்றவற்றை தாரணை செய்வதற்காக எழுதுகின்றனர். மருத்துவர்களிடம் கூட நிறைய மருந்துகள் இருக்கும். அனைத்தும் புத்தியில் நினைவு இருக்கும். வக்கீலின் புத்தியில் அனைத்து சட்ட சம்மந்தமான விஷயங்களின் நினைவு இருக்கும். நீங்கள் எதை நினைவு செய்ய வேண்டும். ஒரே ஒரு விஷயம். அதுவும் மிக எளிதாகும். ஒரு சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். சிவபாபா எப்படி வருவார் என்று அவர்கள் கேட்கிறார்கள். இது கூட உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஈஸ்வரன் எங்கே இருக்கிறார்? பெயர் ரூபத்திற்கு அப்பாற்பட்டவர் என்று அவர்கள் சொல்கிறார்கள். பிறகு சர்வ வியாபி என்றும் சொல்லி விடுகிறார்கள். இரண்டு வார்த்தைகளில் இரவு பகலுக்கான வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது. பெயர் ரூபத்திலிருந்து விடுபட்ட எந்த பொருளும் கிடையாது. பிறகு நாய் பூனை அனைத்திலும் பரமாத்மா இருக்கிறார் என்று சொல்கிறார்கள். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விஷயங்களாக உள்ளது. ஆக, பாபா தன்னுடைய அறிமுகத்தைக் கொடுத்து சொல்கிறார்- தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். சகஜ இராஜயோகம் என்று பாடப் பட்டிருக்கிறது. யோகம் என்ற வார்த்தையை நீக்கிவிடுங்கள், நினைவு செய்யுங்கள் என்று பாபா சொல்கிறார். சிறிய குழந்தைகள் தாய் தந்தையரை பார்த்ததும் உடனே அணைத்துக் கொள்கிறார்கள். முதலில் இவர்கள் என்னுடைய தாய் தந்தை தானா என்று சிந்திக்கிறது. இதில் சிந்திப்பதற்கான விஷயமே இல்லை. நீங்கள் சிவபாபாவை மட்டும் நினைவு செய்ய வேண்டும். பக்தி மார்க்கத்தில் கூட நீங்கள் சிவன் மீது மலர்களை போடுகிறீர்கள். சோம்நாத் கோவில் எவ்வளவு பெரியதாக உருவாக்கப்பட்டுள்ளது. பிறகு முகமது கஜினி வந்து கொள்ளையடித்தான். சோம்நாத் கோவில் பாரதத்தில் புகழ் பெற்றது. முதலில் சிவனுடைய பூஜை தான் நடக்க வேண்டும். குழந்தைகளுக்கு இந்த முழு ஞானமும் புத்தியில் வந்துள்ளது. பூஜை போன்ற வைகளை செய்து கொண்டே வந்தீர்கள். ஆனால் இவை ஜடச் சித்திரங்கள் என்று உங்களுக்கு தெரியவே யில்லை. கண்டிப்பாக சைத்தன்யமாக (உயிரோட்டமுடைய) பகவான் வந்திருக்க வேண்டும். ஆகையால் தான் வருடா வருடம் சிவ ஜெயந்தி கூட கொண்டாடுகிறார்கள். சிவ பரமாத்மா நிராகாரமானவர் என்று கூட சொல்கிறார்கள். நாம் கூட நிராகாரமானவர்கள் என்று ஆத்மா தெரிந்திருக்கிறது. இப்போது நீங்கள் ஆத்மா அபிமானி ஆகிறீர்கள். இது மிகவும் எளிதாகும். அவர் நம்முடைய தந்தையாவார். ஞானக்கடல், சுகத்தின் கடல், பதீத பாவனன் ஆவார். அவருக்கு மிகுந்த மகிமை இருக்கிறது. பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்கு இவ்வளவு மகிமை கிடையாது. ஒருவருடைய மகிமையைத் தான் பாடுகின்றனர். இப்போது பாபா வந்து நமக்கு ஆஸ்தியை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். லௌகீக தந்தை குழந்தைகளை பாலனை செய்கிறார், படிப்பிப்பதில்லை. படிப்பிற்காக பள்ளிக்கூடத்திற்கு செல்கிறார்கள். பிறகு வானப்பிரஸ்த நிலையில் குருவிடம் செல்கிறார்கள். இன்றைய காலத்தில் சிறியவர்கள் பெரியவர்கள் அனைவரும் குருவிடம் செல்கிறார்கள். சிவபாபாவை நினைவு செய்யுங்கள், அனைவருக்கும் உரிமை இருக்கிறது என்று குழந்தைகளாகிய உங்களிடம் சொல்லப்படுகிறது. அனைவரும் என்னுடைய குழந்தைகள். உங்களிலும் கூட சிலர் நன்றாக நினைவு செய்கிறார்கள். நிறைய பேர் சொல்கிறார்கள் - பாபா யாரை நினைவு செய்வது? புள்ளியை எப்படி நினைவு செய்வது? பெரிய பொருளை நினைவு செய்யப்படுகிறது. யாரை நீங்கள் நினைவு செய்கிறீர்களோ அவர் யார்? அப்போது சொல்கிறார்கள் -

அகண்ட ஜோதி சொரூபம்; ஆனால் அப்படி கிடையாது. அகண்ட ஜோதியை நினைவு செய்வது தவறாகி விடுகிறது. நினைவு என்பது துல்லியமாக இருக்க வேண்டும். முதலில் துல்லியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பாபா தான் வந்து தன்னுடைய அறிமுகத்தைக் கொடுக்கிறார். பிறகு குழந்தைகளுக்கு முழு உலகத்தின் முதல் இடை கடை செய்தியை சொல்கிறார். விரிவாகவும் சொல்லப்படுகிறது, சுருக்கமாகவும் சொல்லப்படுகிறது. இப்போது பாபா சொல்கிறார் - குழந்தைகளே! நீங்கள் தூய்மையாக வேண்டுமென்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது - என்னை நினைவு செய்யுங்கள். என்னை பதீத பாவனன் என்று சொல்கிறார்கள். ஆத்மாவைத் தூய்மையாக்க வேண்டும். நாம் தூய்மையை இழந்துவிட்டோம் என்று ஆத்மா தான் சொல்கிறது. நாம் தூய்மையாக இருந்தோம் இப்போது தூய்மை இழந்து விட்டோம். அனைவரும் தமோபிரதானமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பொருளும் சதோபிரதானமாக இருந்து பிறகு தமோபிரதானமாக ஆகிறது. நான் தூய்மை இழந்து விட்டேன் என்னை தூய்மையாக்குங்கள் என்று ஆத்மாவே சொல்கிறது. சாந்திதாமத்தில் தூய்மையற்றவர்கள் இருப்பதில்லை. இங்கே தூய்மையற்று இருப்பதால், துக்கமாக இருக்கிறார்கள். எப்போது தூய்மையாக இருந்தார்களோ அப்போது சுகமாக இருந்தார்கள். ஆத்மாதான் சொல்கிறது - எங்களை தூய்மையாக்குங்கள், அப்போது நாங்கள் துக்கத்திலிருந்து விடுபட்டு விடுவோம். ஆத்மா தான் அனைத்தும் செய்கிறது என்று நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். ஆத்மா தான் நீதிபதியாகவும் வக்கீலாகவும் ஆகிறது. ஆத்மா தான் சொல்கிறது - நான் ராஜா, நான் இன்னார். இப்போது இந்த சரீரத்தை விட்டு புதியதை எடுக்க வேண்டும். இதை ஆத்ம அபிமானி என்று சொல்லப்படுகிறது. தேகத்தில் இருந்தாலும் ஆத்ம அபிமானி. இராவண ராஜ்ஜியத்தில் தேக அபிமானிகளாக இருக்கிறார்கள். ஆத்ம அபிமானியாக இப்போது பாபா மாற்றுகிறார். இந்த நேரம் ஆத்மா தூய்மை இழந்து துக்கமாக இருக்கிறது. ஆகையால், பாபா வாருங்கள் என்று அழைக்கிறது. நாடகத் திட்டப்படி தூய்மையற்றவரிலிருந்து தூய்மையானவர்களாக, தூய்மையானவரிலிருந்து துய்மையற்றவர்களாக ஆகி வந்தோம். இதைக் கூட நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. நம்முடைய 84 பிறவிகள் எப்படி ஏற்பட்டது என்று இப்போது உங்களுடைய புத்தியில் இருக்கிறது. இப்போது இந்த விஷயத்தை மறக்காதீர்கள். சுயதரிசன சக்கரதாரியாக இருங்கள். எழும்போதும் அமரும் போதும், நடக்கும் போதும், சுற்றும் போதும் புத்தியில் முழு ஞானமும் இருக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து நாம் எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தி அடைந்து கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு தந்தையைத் தான் நினைவு செய்ய வேண்டும் என்று பாபா குழந்தைகளுக்கு புரிய வைக்கிறார். பாபாவை நினைவு செய்யுங்கள், ரொட்டித்துண்டை சாப்படுங்கள் அவ்வளவுதான்.

இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாபா அடிக்கடி சொல்கிறார்; - குழந்தைகளே வயிற்றுக்காக ரொட்டித்துண்டு மட்டும் சாப்பிட வேண்டும். வயிறு ஒன்றும் அதிகமாக சாப்பிடுவதில்லை. ஒரு கைப்பிடி மாவு உணவை சாப்பிடுகிறது. பருப்பு ரொட்டி போதும், 10 ரூபாயில் மனிதர்களின் வயிறு நிரம்பிவிடுகிறது. 10 ஆயிரம் ரூபாய்க்குக் கூட மனிதர்கள் வயிற்றை நிரப்பு கிறார்கள். ஏழை மக்கள் என்ன சாப்பிடுகிறார்கள். ஆனால் கூட ஆரோக்கியமாக இருக்கிறார்கள். மனிதர்கள் வித விதமான உணவை சாப்பிட்டு இன்னும் நோய் வாய்ப்படுகிறார்கள். டாக்டர்கள் கூட கூறுகின்றனர் - ஒரே விதமான உணவை உண்டு வந்தால் நோய்வாய்ப்பட மாட்டீர்கள். ஆக பாபாவும் கூறுகிறார் - ரொட்டித் துண்டு உண்ணுங்கள். கிடைப்பதைக் கொண்டு குஷியாக இருங்கள். ரொட்டி- பருப்பு போல வேறு எந்தப் பொருளும் இல்லை. அதிக இச்சையும் கூட இருக்கக்கூடாது. சன்னியாசிகள் என்ன செய்கிறார்கள்? வீடு வாசல் விட்டு காட்டுக்குச் சென்று விடுகின்றனர். தத்துவத்தை பரமாத்மா என்று புரிந்து கொண்டு நினைவு செய்கின்றனர். பிரம்மத்தில் ஐக்கியமாகி விடலாம் என்று புரிந்து கொள்கின்றனர். ஆனால் அப்படி இல்லை. ஆத்மாவோ அமரராக உள்ளது. ஐக்கியமாகக் கூடிய விஷயம் இல்லை. மற்றபடி ஆத்மா தூய்மையாகவும், தூய்மையற்றதாகவும் ஆகிறது. உங்களுக்கு எவ்வளவு நல்ல ஞானம் கிடைத்துள்ளது. நீங்கள் தான் பலனை அனுபவம் செய்கிறீர்கள்; பிறகு இந்த ஞானம் மறந்து போய்விடுகிறது. பிறகு ஏணியில் இறங்குவது நடக்கிறது. இப்போது உங்களுடைய புத்தியில் நாம் எப்படி 84 பிறவிகளை அனுபவம் செய்கிறோம் என்ற முழுமையான ஞானமும் அமர்ந்துள்ளது. இந்த நடிப்பின் பாகம் ஒருபொழுதும் யாருடையதும் நின்று போவது கிடையாது. இது உருவாக்கப்பட்ட நாடகமாகும். அது சுற்றிக்கொண்டே தான் இருக்கும். பகவான் எப்போது எங்கே அமர்ந்து உருவாக்கினார் என்பதைக் கூற முடியாது. இது நடந்து கொண்டே தான் வருகிறது. உலகத்தின் வரலாறு புவியியல் மீண்டும் மீண்டும் நடந்து கொண்டே

தான் இருக்கிறது. இந்த விஷயங்களை யாரும் புரிந்து கொள்வதே இல்லை. நாம் நாடகத்தின் திட்டப்படி வந்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது மீண்டும் நாடகத்தின் படி ராஜ்ஜியத்தை அடைந்து கொண்டு இருக்கிறீர்கள். இந்த விஷயங்களை வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. நாடகம் சர்வ சக்திவானா? அல்லது ஈஸ்வரனா? என்று கேட்கப்பட்டால் ஈஸ்வரன் சர்வ சக்திவான் என்று கூறுகின்றனர். அவர் அனைத்தையும் செய்ய வல்லவர் என்று புரிந்து கொள்கின்றனர். தந்தை கூறுகிறார் - நானும் கூட நாடகத்தின் கட்டுப்பாட்டில் கட்டப்பட்டிருக்கிறேன். தூய்மையற்றவர்களை தூய்மையாக்க நான் வரவேண்டி உள்ளது. நீங்கள் சத்யுகத்தில் சுகம் நிறைந்தவர்களாக ஆகிவிடுகிறீர்கள். நானும் கூட பரந்தாமத்தில் சென்று ஓய்வில் இருந்துவிடுகிறேன். நீங்கள் உயர்ந்த குலத்திற்குச் சென்று விடுகிறீர்கள். ஆகையால் உங்களுடையது சிங்கத்தின் மீதான சவாரியாகும்.

ஒவ்வொரு வினாடியும் நடப்பது அனைத்தும் நாடகத்தில் பதிவாகியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு நல்ல ஞானம் உள்ளது. இப்போது தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள் போதும். பேப்பர், பென்சில் முதலானவைகள் அவசியமில்லை. பிரம்மா பாபாவும் கூட படிக்கிறார். இவரோ எதையும் வைத்துக்கொள்வதில்லை. தந்தையை நினைவு மட்டும் செய்ய வேண்டும் அப்போது ஆஸ்தி கிடைத்துவிடும். எவ்வளவு சகஜமாக உள்ளது. நினைவின் மூலம் நீங்கள் எப்போதும் ஆரோக்கியமுள்ளவராக ஆகிறீர்கள். இது தாரணையின் விஷயமாகும். எழுதுவதால் என்ன லாபம் உண்டாகும். இவை அனைத்தும் அழிந்துவிடும். ஆனால், நினைவில் வைப்பதற்காக எழுகின்றனர். எதையாவது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் முடிச்சு போட்டுக் கொள்வது போலாகும். நீங்களும் முடிச்சு போட்டு வைத்துக் கொள்ளுங்கள், சிவபாபா மற்றும் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும். யோகம் அதாவது நினைவு மிகவும் சகஜமானதாகும். பாபா நினைவு நிலைப்பதில்லை. நினைவில் அமர்வது எப்படி என்று கேட்கின்றனர். லௌகீக தந்தையின் நினைவு அமர்ந்து எழுந்த படி நடந்து சுற்றியபடி இருக்கிறது, அதேபோல நீங்களும் நினைவு மட்டும் செய்யுங்கள் போதும். படகு கரை சேர்ந்துவிடும். நல்லது !

இனிமையிலும் இனிமையான காணாமல்போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாராம்:

1. சுயதரிசன சக்கரதாரி ஆகி 84 பிறவிகளின் சக்கரத்தை புத்தியில் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டும். எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தையை நினைவு செய்து எல்லைக்கு அப்பாற்பட்ட ஆஸ்தியை எடுக்க வேண்டும். தூய்மை அடைய வேண்டும்.

2. எந்த பொருளின் மீதும் ஆசை வைக்கக்கூடாது. கிடைத்ததைக் கொண்டு மகிழ்ச்சி அடைய வேண்டும். ரொட்டித்துண்டை உண்ண வேண்டும். தந்தையின் நினைவில் இருக்க வேண்டும்.

வரதானம்: யாருடைய குறைகளையும் பலவீனங்களையும் பார்க்காமல் தன்னுடைய குணங்கள் மற்றும் சக்திகளின் சகயோகத்தைக் கொடுக்கக் கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக.

எப்போதும் அனைத்து ஆத்மாக்களும் எனக்குச் சமமாக ஆஸ்திகளின் அதிகாரி ஆகிவிட வேண்டும் என்ற ஆன்மீக பாவனையில் இருப்பவர் தான் மாஸ்டர் வள்ளல் ஆவார். யாருடைய குறைபாடுகளையும் பலஹீனங்களையும் பார்க்காமல் அவர்கள் தாரணை செய்துள்ள குணங்களின் மற்றும் சக்திகளின் சகயோகம் கொடுப்பார். இவர் இப்படியே தான் இருப்பார் என்ற பாவனைக்குப் பதிலாக நான் இவரைக்கூட தந்தைக்குச் சமமாக ஆக்குவேன் என்ற சுபபாவனை இருக்க வேண்டும். கூடவே இந்த அனைத்து ஆத்மாக்களும் ஏழ்மை, துக்கம் மற்றும் அசாந்தியிலிருந்து எப்போதும் அமைதியான சுக ரூபமான அளவற்ற செல்வம் நிறைந்தவராக ஆகிவிடட்டும் என்ற இதே சுப விருப்பம் இருக்க வேண்டும். அப்போது மாஸ்டர் வள்ளல் என்று கூறுவார்கள்.

சுலோகன்: மனம் சொல் செயலால் சேவை செய்பவர்கள் தான் நிரந்தரமான சேவாதாரிகள் ஆவார்கள். அவர்களுடைய ஒவ்வொரு சுவாசத்திலும் சேவை அடங்கியுள்ளது.